# கட்டுமானப் பணிகளின் காரணமாக உங்களுடைய சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களைத் திறம்படக் கையாளுதல்

## சப்தம், அதிர்வுகள் மற்றும் வாகனப் போக்குவரத்துகள்

தமது வாழ்க்கையில் வெற்றி பெறத் தேவைப்படும் திறன்களையும், படிப்பையும் இள-வயதினருக்கு அளிப்பதற்கான மிகச் சிறந்த சூழல்களை NSW மாநிலம் முழுதும் உள்ள பாடசாலைகளில் அளிக்கவேண்டும் என்பதில் நாங்கள் பற்றுறுதி கொண்டுள்ளோம். புதிய மற்றும் தர-உயர்வு செய்யப்படும் பாடசாலைகளில் வரலாறு காணாத முதலீடுகளை நாங்கள் செய்துவருகிறோம், அத்துடன், பின் வருவனவற்றைப் போன்ற பல விதமான தாக்கங்களை இந்தப் பணிகள் ஏற்படுத்தக்கூடும் என்பதை நாங்கள் அறிவோம்:

**கருவிகள் மற்றும் இயந்திரங்களினால் ஏற்படும் சப்தங்கள்**

**கட்டட இடிப்புகள், அகழ்வுகள் மற்றும் துளையிடல்கள் காரணமாக ஏற்படும் அதிர்வுகள்**

**இடிபாடு மற்றும் அகழ்வுப் பணிகளினால் எழும்பும் புழுதி**

**உள்ளூர்ப்-பகுதி சாலைகளில் வாகனப் போக்குவரத்துகளின் அதிகரிப்பு அல்லது அங்கு ஏற்படும் மாற்றங்கள்**

கட்டுமானப் பணிகளின் காரணமாக ஏற்படும் தாக்கங்களைப் பின்வரும் வழிகளில் குறைப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்:

**பணிகள் துவங்குவதற்கு முன்பாக, கட்டுமானத்திற்கான ஆயத்தத்தினை மேற்கொள்ளல்**

**பணிகளின் காரணமாகத் தாக்கமடையவல்ல அயலவர்கள் அல்லது மற்றவர்களுடன் தொடர்புகொள்ளல்**

**இயலுமானால், தாக்கங்களைக் குறைப்பதற்காக, கட்டுமானப் பணிகள் பூரணப்படுத்தப்படும் விதத்தினை நிர்வகித்தல்**

## பணிகள் துவங்குவதற்கு முன்பாக, கட்டுமானத்திற்கான திட்டமிடலை மேற்கொள்ளல்

கட்டுமானத் திட்டங்கள் மற்றும் சுற்றுச்-சூழல் நிர்வாகத் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் பல திட்டங்களை நாங்கள் உருவாக்கிவருகிறோம். எமது தலத்தில் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ள கட்டுமானத் தாக்கங்களை நாங்கள் எவ்வாறு கட்டுப்படுத்துவோம் என்பதை இந்தத் திட்டங்கள் கோடிட்டுக் காண்பிக்கும்.

ஒவ்வொரு கட்டுமானப் பணித் தலமும் வெவ்வேறானதாக இருக்கும், ஆகவே வெவ்வேறு விதமான கட்டுமான அணுகல்-முறைகளை நாங்கள் பயன்படுத்துகிறோம். இதன் விளைவாக, ஒவ்வொரு திட்டத்தினாலும் ஏற்படும் தாக்கங்களை நிர்வகிப்பதற்கான எமது திட்டங்கள் மாறுபட்டவையாக இருக்கும். எமது திட்டங்களைச் செயல்படுத்தும் பொழுது, ஒவ்வொரு திட்டத்தினாலும் தாக்கமடையக் கூடிய குடியிருப்பாளர்களையும் வர்த்தகங்களையும் நாங்கள் கருத்தில் கொள்கிறோம்.

எமது திட்ட அணுகல் முறைகளில் உள்ளடங்குவன:

- கட்டுமானப் பணிகளினால் ஏற்படும் சப்தம் மற்றும் அதிர்வுகளைக் கேட்க, அல்லது உணரக் கூயவர்களை அல்லது அவற்றினால் தாக்கமுறக் கூடியவர்களை அடையாளம் காணல்
- குறிப்பிட்ட ஒரு திட்டதிற்கான சட்ட பூர்வமான மற்றும் ஒழுங்கு-முறை சார்ந்த விதிமுறைகளைப் பின்பற்றுதல். எமது தலம் இயங்கிக்கொண்டிருக்கும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய விதிகளின் தொகுப்பு ஒன்றை இவை எமக்கு அளிக்கும்
- தலத்தில் எம்மால் ஏற்படும் சப்தம் மற்றும் அதிர்வுகளின் தாக்கத்தினைக் குறைப்பதற்கான வழிகளை அடையாளம் காணல்
- கட்டுமானப் பணி வாகனங்கள் தலத்திற்குள் வருவதற்கும் போவதற்குமான மிகப் பாதுகாப்பான வழிகளை அடையாளம் காணல்
- எமது அயலவர்கள் அவர்களுடைய வீடு மற்றும் சொத்துகளுக்கு வந்து போவதற்குப் பாதுகாப்பான வழிப் பாதைகளை நிர்வகித்தல்
- தலத்திலும், அதற்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் வாகனத் தரிப்பிற்கான திட்டங்களை இடல்
- தலத்தில் எழும் புழுதியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்



NSW GOVERNMENT

# கட்டுமானப் பணித் தலத்தினால் ஏற்படும் தாக்கங்களைத் திறம்படக் கையாளுதல்

## உள்ளூர் சமூகத்தின் மீது ஏற்படும் தாக்கத்தினைக் குறைத்தல்

கட்டுமான வேலைகளினால் இடையூறுகள் ஏற்படலாம், ஆகவே, இந்த முக்கியமான பாடசாலைக் கட்டுமானத் திட்டத்தினை நாங்கள் நிறைவேற்றும் காலத்தில் நீங்கள் பொறுமையாக இருப்பதற்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

கட்டுமானப் பணிகளின் காரணமாக ஏற்படும் சப்தங்கள் மற்றும் அதிர்வுகளின் தாக்கத்தினைக் குறைப்பதற்கான வழிகள் பலவுள்ளன. ஒவ்வொரு திட்டத்திற்காகவும் நாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெவ்வேறானவை, ஆனாலும், பின் வருவன அவற்றில் உள்ளடங்கலாம்:

- சப்தத்தை எழுப்பும் கருவிகளை வகுப்பறைகள் மற்றும் வீடுகளிலிருந்து தூரமாக வைத்தல்
- கருவிகளைப் பழுது இல்லாமல் நன்றாக இயங்கும் நிலையில் வைத்திருத்தல்
- சப்தத்தை அதிகம் ஏற்படுத்தும் கருவிகளில் சப்தக் கட்டுப்பாட்டு சாதனங்களைப் பொருத்துதல்
- அதிக சப்தம் ஏற்படுத்தும் பணிகளை ஆள் நடமாட்டம் குறைந்த நேரங்களில் மேற்கொள்ளல்
- பாடசாலைப் பரீட்சைகள், மற்றும் இதர முக்கியமான பாடசாலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும் காலங்களுக்கு அப்பாற்பட்ட நேரங்களில் சப்தம் ஏற்படுத்தக்கூடிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளல்
- கட்டுமானப் பணிகள் நடைபெறும் பொழுது கருவிகளின் சப்தம் அதிகமாக இருக்கும் நேரங்களில் ஓய்வு இடைவேளைகளைக் ஏற்படுத்தல்

உள்ளூர் சமூகத்தின் மீதான தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்காக கட்டுமான ஒப்பந்ததாரர்களுடன் நாங்கள் இணைவாய்ச் செயல்படுவோம். பின் வருவனவற்றின் மூலம் வேலைகளினால் ஏற்படும் தாக்கத்தினைக் குறைக்க அவர்களது உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்:

- அவர்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகளை எமது ஒப்பந்தங்களில் சேர்த்தல்
- தலங்களுக்கான விதிமுறைகள் குறித்து கட்டுமானப் பணியாளர்களுக்கு நினைவூட்டுவதற்காக அவர்களுடன் தல சந்திப்புகளை மேற்கொள்ளல்
- தலத்தில் சப்தங்களை எவ்வாறு குறைக்கலாம் என்பதைப் பற்றித் தொழிலாளர்களுக்கு நினைவூட்டுவதற்காக தலத்தைச் சுற்றி அடையாளக் குறியீடுகளை வைத்தல்

கட்டுமானப் பணிகளினால் ஏற்படும் சப்தங்களையும், இடையூறுகளையும் குறைக்க உதவக்கூடிய 'நவீன கட்டுமான முறைக'(modern methods of construction (MMC))ளை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். கட்டிடத்தில் பயன்படுத்தப்படும் பகுதிகளைத் தொழிற்சாலை ஒன்றில் தயாரித்து, பிறகு அவற்றை ஒன்றிணைப்பதற்காகத் தலத்திற்கு அனுப்புவது இதில் உள்ளடங்கும். MMC திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இடங்களில் குறைந்த சப்தம், குறைந்த புழுதி, குறைந்த வாகனப் போக்குவரத்து மற்றும் குறைந்த இடையூறுகளே இருக்கும் என்பதை இது குறிக்கும்.

## கட்டுமானப் பணிகள் நடைபெறும் நேரங்கள்

சில வேளைகளில், வழக்கமான வேலை நேரத்திலிருந்து மாறுபட்ட நேரங்களில் நாங்கள் பணியாற்ற வேண்டியிருக்கும். பின் வருவன வேலை-நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரங்களில் உள்ளடங்கலாம்:

- பெரிய அளவிலான பொருட்களை வேலைத்தலத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்குக் கன-ரக வாகனங்கள் வந்து செல்வதற்காக செய்யப்படும் சாலை மூடல்கள்
- தொலைபேசி, நீர், மின்சாரம் அல்லது கழிவு-நீர்க் குழாய்கள் மற்றும், கம்பிகளை இடமாற்றம் செய்யல்
- தலத்தில் இடம்பெறும் அவசர-கால வேலைகள்

வழமையான கட்டுமானப் பணி நேரங்கள்:

- திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை
- சனிக் கிழமைகளில் காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை
- ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் பணிகள் நடைபெறாது.

## எமது கட்டுமானப் பணிகளைப் பற்றி உங்களுக்கு அறியத்தரல்

கட்டுமானப் பணிகள் நடைபெறும் காலத்தில், இடையூறுகளை ஏற்படுத்தும் வேலைகள் துவங்குவதற்கு முன்பாக, எமது அயலவர்களுக்கு நாங்கள் அதை அறிவிப்போம். பின் வருவனவற்றைப் பற்றி நாங்கள் உங்களுக்குச் சொல்வோம்:

- பணிகள் துவங்கும், மற்றும் முடியும் என நாங்கள் எதிர்பார்க்கும் நேரம்
- தலத்தில் நாங்கள் மேற்கொள்ளவிருக்கும் பணிகளின் வகைகள்
- இந்தப் பணிகளின் காரணமாக எதிர்பார்க்க வேண்டிய இடையூறுகளின் வகை
- இந்தப் பணிகளைப் பற்றிய உங்களுடைய கேள்விகள் மற்றும் முறைப்பாடுகளுக்காக எம்முடன் தொடர்புகொள்வதற்கான தொலைபேசி இலக்கம் ஒன்று

வேலை-நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரங்களில் நாங்கள் எதிர்பாராத பணிகளை மேற்கொள்ளவேண்டியிருந்தால், அதற்கான காரணங்கள் என்னவென்பதைக் கூடிய விரைவில் பிறகு விளக்கிச் சொல்வோம்..

'NSW பாடசாலை உள்கட்டமைப்பு' திட்டப்பணிகள் பற்றி எமது வலைத்தலத்தில் நீங்கள் மேலும் தெரிந்துகொள்ளலாம். schoolinfrastructure.nsw.gov.au எனும் வலைத்தலத்திற்குச் சென்று, எமது தேடல் பெட்டியில் பாடசாலையின் பெயரை உள்ளிடுங்கள்.

**மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை'க்கு 131 450 -ஐ அழைத்து, 1300 482 651**-இல் 'NSW கல்வித் திணைக்களப் பாடசாலை உள்கட்டமைப்புகள்' (Department of Education - School Infrastructure NSW)-ஐ அழைக்குமாறு கேளுங்கள்.

**கட்டுமானப் பணிகளால் ஏற்படும் தாக்கங்களை நாங்கள் எவ்வாறு திறம்படக் கையாள்கிறோம் என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:**

மின்னஞ்சல்: schoolinfrastructure@det.nsw.edu.au
தொலைபேசி: 1300 482 651



NSW GOVERNMENT